திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், ரஜினி மன்றத்திலிருந்து விலகி வி.ஐ.எஸ்.தமீம் தலைமையில் 50 நபர்கள் திருச்சி மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில், கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இவர்களை சந்தித்து தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் திருச்சி கிழக்கு சட்ட மன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (03.12.2023) வடகிழக்குப் பருவமழையினைமுன்னிட்டு, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜாம் புயல் சின்னத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இராயபுரம் மண்டல அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் ஆர். பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, மண்டல கண்காணிப்பு அலுவலர் கே விஜயகார்த்திகேயன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நகரமைப்புக்குழுத் தலைவர் தா. இளைய அருணா, மண்டல அலுவலர், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எல்லா வகையிலும் பருவ மழையையும், புயலையும் எதிர்கொள்வதற்கு

24 மணி நேரமும் தயாராக இருக்கிறோம்!

ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.4-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று (03.12.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6ல் அடங்கியுள்ள கொளத்தூர் மற்றும் வி.நகர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட பகுதிகளில் பருவ மழை மற்றும் மிக்ஜாம் புயலை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசால் இந்த பருவமழையை எதிர்கொள்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கண்காணிப்பு அலுவலராக இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, 24 மணி நேரமும் எங்களோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் கொளத்தூர் மற்றும் வி.நகர் தொகுதிகளை உள்ளடக்கிய மாநகராட்சி மண்டலம் 6ன் கண்காணிப்பு அலுவலரான நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன்,. மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன்குமார் இந்த மழையை எதிர்கொள்ளும் பணிகளில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், தி.மு.க. பகுதி செயலாளர் நாகராஜன், முரளி, சந்துரு, மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் முழுமையாக களத்தில் பணியாற்றி வருகின்றனர். பெரும் மழையை எதிர்கொள்ளும் முன்னேற்பாடு பணிகளில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களோடு, கூடுதலாக திராவிட முன்னேற்றக் கழகமும் முன்னின்று களத்திலே நின்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதனை பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

சேலத்தில் உட்கார்ந்து கொண்டு, தற்போது அறிக்கை விடுகின்ற சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது கூட மக்கள் பாதிப்பு அடைந்திருந்த நிலையில் வெளியில் வந்து எட்டிப் பார்க்காதவர். ஆளுங்கட்சியாக இருந்தபோதும் அவரது கட்சி நிர்வாகிகள் எங்கும் வெள்ள நிவாரப்பணியில் ஈடுபடாதவர்கள். தற்போது பெய்து வரும் பெரும் மழை வெள்ளத்தின் போது கூட எங்கும் நிவாரண பணிகளில் ஈடுபடாதவர் சேலத்தில் உட்கார்ந்து கொண்டு 4000 கோடி ரூபாய் செலவு செய்தும் சென்னை இன்று தத்தளிக்கிறது என்கிறார். தத்தளிப்பது சென்னை அல்ல, சென்னை மாநகரத்து மக்களை காப்பாற்றுவதற்கு முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார். தத்தளித்துக் கொண்டிருப்பது அவரும், அவருடைய இயக்கமும் தான் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டு இருக்கின்றேன்.

2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் போது திறனற்ற ஒரு அரசு இருந்ததால் நிவாரண பணிகள் முழு வேகத்தில் நடைபெறவில்லை. 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தில் போது அன்றைய முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி ஒட்டுமொத்தமாக சென்னையில் நாங்கள் மழைநீர் வடிகால்களை அமைத்து விட்டோம், சிங்கப்பூர் போல் ஒரு சொட்டு தண்ணீர் கூட நிற்காது என்று தேர்தல் பிரச்சாரத்தில் கூறியதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு, வந்த பெரும் மழையின் போது பாதிப்புகளை பார்வையிட முதலமைச்சர் வந்தபோது, பாரிஸ் பகுதிகளில் பிரகாசம் சாலை, வால் டாக்ஸ் சாலை, மின்ட் சாலை, புளியந்தோப்பு சாலை, அங்காளம்மன் கோயில் தெரு, பேப்பர் மில்ஸ் சாலை போன்ற சாலைகளில் வாகனத்தில் கூட வரமுடியாத நிலை இருந்தது.

2016 -ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை சென்னையின் மழை நீர் வடிகால் பணிகள் மற்றும் கால்வாய்கள் மேம்படுத்துவதற்கு ரூ. 6,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கொள்கை விளக்க குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த பணம் முழுவதுமாக செலவு செய்யப்பட்டிருந்தால் 2021 ஆம் ஆண்டின் பெருமழையில் அவ்வளவு பெரிய பாதிப்பு மக்களுக்கு ஏற்பட்டிருக்காது. ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு 4,000 கோடி ரூபாய் அளவிற்கு மழை நீர் வடிகால் பணிகளை முடித்து இருக்கின்றோம். மேலும் தேவைப்படுகின்ற பணிகளை கணக்கிட்டு, இந்த பருவ மழை முடிந்த உடன் அந்த பகுதிகளிலும் தண்ணீர் தேங்காத அளவிற்கு வடிகால் பணிகளை அமைத்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்.

கொளத்தூர் பகுதியில் ஜவகர் நகர், எஸ்ஆர்பி கோயில் தெரு, 70 அடி சாலை, செல்வி நகர் செந்தில் நகர், சீனிவாசன் நகர், டீச்சர்ஸ் கில்ட் காலனி, காவேரி நகர் போன்ற பகுதிகளில் எல்லாம். மழை பெய்து விட்டவுடன் ஒரு மணி நேரம் முதல் இரண்டு மணி நேரத்திற்குள் முழுவதுமாக மழை நீர் வெளியேற்றப்பட்டது. இதற்கு காரணம் தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு சுமார் 78 கிலோ மீட்டர் நீளத்திற்கு கால்வாய்கள் முழுவதுமாக செப்பனிடப்பட்டும், கொளத்தூரில் மட்டும் 80 கோடி ரூபாய் செலவில் புதிதாக 16.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடிகால்கள் அமைக்கின்ற பணியையும் நிறைவேற்றி இருக்கின்றோம்.

அதேபோல கொளத்தூரில் இருந்து வெளியேறுகின்ற தண்ணீர் பல்லவன் சாலை வழியாக ஜவகர் நகருக்கு செல்ல வேண்டும். கடந்த காலங்களில் பல்லவன் சாலையில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆனால் கூட அந்த பகுதிகளில் தண்ணீர் வற்றாது. ஆனால் இந்த பெரு மழைக்கு பல்லவன் சாலையில் எங்குமே தண்ணீர் தேங்கவில்லை. இதுதான் மாற்றத்திற்கு உண்டான அறிகுறியாகும்.

கடந்த நவம்பர் 30ந்தேதி மாலை 5 மணியிலிருந்து 7 மணிக்குள் இரண்டு மணி நேரம் இடைவிடாமல் 15 சென்டிமீட்டர் மழை பெய்த காரணத்தினால் மழைநீர் தேங்கி இருந்தது. அந்த நேரத்தில் ஒரு சில நல்லெண்ணம் கொண்ட ஊடகங்கள் இதனை படம்பிடித்து கொளத்தூரில் மழை நீர் தேங்கியதாக செய்தியை பரப்பினார்கள். கொளத்தூரை பொறுத்த அளவில் மழைநீர் தேங்கிய அனைத்து பகுதிகளிலுமே 12 மணி நேரத்தில் முழுவதுமாக மழை நீரை வெளியேற்றி இருக்கின்றோம்.

உணவு வழங்கிட முதல்வர் உத்தரவு!

அதேபோல் இன்றைக்கும் நாளைக்கும் பெரும் மழை மற்றும் புயலின் தாக்கம் இருக்கும் என்று கருதப்படுகின்ற நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பணிகளை விரைவுபடுத்திட மேயர் பிரியாவுக்கு அறிவுறுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து இன்று காலை முதல் மண்டலங்கள் வாரியாகவும், துறைமுகம், ராயபுரம், ஆர்.கே. நகர், திரு. வி.க. நகர், கொளத்தூர் என சட்டமன்ற தொகுதிகள் வாரியாகவும் ஆய்வினை மேற்கொண்டு வருகிறோம்.

பெரும் மழையின் காரணமாக எங்காவது மரங்கள் சாய்ந்து கிடந்தால் அல்லது கிளைகள் முறிந்து விழும் நிலையில் இருந்தால் அல்லது பழுதடைந்த கட்டிடங்கள் ஆபத்தான நிலையில் இருந்தால் அவற்றையெல்லாம் கண்காணித்து பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திடவும், மிகவும் தாழ்வான பகுதிகளில் மக்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத நிலை இருந்தால் அவர்களை நிவாரண முகாமில் தங்க வைக்கவும், காலை, மதியம், இரவு என்று அனைத்து நேரங்களிலும் கொளத்தூர் மாத்திரம் அல்ல சென்னை முழுவதும் உணவை தாராளமாக வழங்கிடவும் முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார்.

அதன்படி, கொளத்தூரில் நிவாரண முகாம்கள் அமைத்திட ஏழு இடங்களை அடையாளம் கண்டு இருக்கின்றோம். அதேபோல் ஒரு சில பகுதிகளில் மழை நீர் தேங்கிய காரணத்தினால் அங்கு ஏதாவது நோய் தொற்று ஏற்படக்கூடாது என்பதற்காக நேற்றைய தினம் 100 இடங்களிலும், .இன்றைக்கு 48 இடங்களிலும் மருத்துவ முகாம்களை நடத்தி இருக்கின்றோம். இந்த மருத்துவ முகாம்கள் அரசின் சார்பில் ஒருபுறம் என்றால், திராவிட முன்னேற்ற கழக மருத்துவ அணியின் சார்பில் ஆர்.கே. நகரில் இன்றைய தினம் ஒரு மருத்துவ முகாமை நானும்.மேயர் அவர்களும் தொடங்கி வைத்தோம். இதுபோல பல இடங்களில் அரசு ஒருபுறம், திராவிட முன்னேற்ற கழகம் ஒருபுறம் என்று மக்கள் பணியில் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றோம்.

மக்களுக்குத் தரமான மருத்துவச் சிகிச்சை!

பெரியார் நகர் புறநகர் மருத்துவமனைக்கு நேரடியாக சென்று களஆய்வு செய்தோம். கடந்த காலங்களில் மழை பெய்து விட்டால் அந்த மருத்துவமனை முழுவதும் பத்து நாட்கள் வரை தண்ணீரில் தத்தளித்து கொண்டிருந்த நிலை மாறி, இன்றைக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாத அளவிற்கு உள்ளது. வடசென்னை மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்ற ஒரு மருத்துவமனையாக இதனை முதலமைச்சர் உருவாக்கி இருக்கின்றார்.

எனவே எல்லா வகையிலும் பருவ மழையையும், புயலையும் எதிர்கொள்வதற்கு 24 மணி நேரமும் தயாராக இருக்கின்றோம். தமிழ்நாடு முதலமைச்சர் தூங்காமல் முழுவதுமாக அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், கழக மாவட்ட செயலாளர்கள் போன்றவர்களோடு தொடர்பு கொண்டு நிவாரப் பணிகளை முடுக்கிவிட்டுக் கொண்டிருக்கின்றார். மக்களை பாதுகாப்பதில் முதன்மையாக இருக்கின்ற முதல்வர் எங்கள் முதல்வர் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

சென்னையில் மொத்தமாக 22 சுரங்கப் பாதைகள் இருக்கின்றன. இதில் 17 சுரங்கப் பாதைகள் பெருநகர சென்னை மாநகராட்சி வசமும், இரு சக்கர வாகனகள் செல்லும் சுரங்கப் பாதை ஒன்றும், 4 சுரங்கப் பாதைகள் நெடுஞ்சாலை துறையின் வசமும் இருக்கின்றன.

போக்குவரத்து பாதிக்கவில்லை!

இந்த பெருமழையின் போது 2 சுரங்கப் பாதைகள் அதாவது, கல்யாணபுரம் மற்றும் சைதாப்பேட்டை சுரங்கப் பாதைகள் மட்டுமே போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது. அவையும் ஒரு சில மணி நேரத்தில் மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. சுரங்கப் பாதைகளில் பெரிய அளவிற்கு தண்ணீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்படவில்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டு அதனால் இருசக்கர வாகனங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டால் அதுகுறித்து கணக்கெடுத்து, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கும் நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம். ஆனால் நாங்கள் அறிந்த வகையில் அனைத்து சுரங்கப் பாதைகளும் இப்போது வரை மக்கள் பயன்பாட்டில் இருக்கின்றது.

முதலமைச்சர் தொலைநோக்கு திட்டத்தோடு, 96 கோடி ரூபாய் செலவில் தணிகாசலம் கால்வாயை அகலப்படுத்தும் பணிகளை இரண்டு மாதங்களுக்கு முன்பு தொடங்கி வைத்தார். அடுத்த பருவ மழையின் போது தணிகாசலம் கால்வாய் அதிக கொள்ளளவு கொண்ட தண்ணீரை வெளியேற்றிடும் வகையில் தயாராகிவிடும். பட்டாளம் ஆஞ்சநேயர் திருக்கோயில், அங்காளம்மன் கோயில் தெரு, புளியந்தோப்பு ஆட்டு தொட்டி, டிமெல்லர்ஸ் ரோடு போன்ற பகுதிகளில் தொடக்கத்தில் தண்ணீர் தேங்கியது. உடனடியாக கால்வாய்களில் சில்ட்கள் அகற்றப்பட்டு தண்ணீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்டுவிட்டது. அப்பகுதியில் எங்கும் தண்ணீர் நிற்கவில்லை என்பது தான் உண்மை.

எந்த பகுதியிலாவது தண்ணீர் தேங்கி நின்றால் அதுகுறித்து செய்தியாளர்களோ பொதுமக்களோ எங்கள் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். உடனடியாக நானும், மேயர் அவர்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி பிரதிநிதிகளும் உடனடியாக அந்த இடத்திற்கு சென்று நிவாரண பணிகளை மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றோம். நீங்கள் கூறுவதை நாங்கள் குற்றமாக எடுத்துக் கொள்ளவில்லை. குறைகளை தெரிவியுங்கள் நிறைவு செய்வதற்கு நாங்கள் காத்திருக்கின்றோம், முதலமைச்சர் அவர்களும் எங்களுக்கு அந்த உத்தரவைதான் இட்டிருக்கின்றார்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டியளித்தார்.

இக்கூட்டத்தில் மண்டலம் 6 கண்காணிப்பு அலுவலர்/நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், மாநகராட்சி மத்திய மண்டல துணை ஆணையர் கே.ஜே.பிரவீன்குமார், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் எ.எஸ். முருகன், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் அறிக்கை!

தேனி, டிச.4-

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (04.12.2023) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தேனி தெய்வா ஹோட்டலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் தலைமை யில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூர் மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. டிசம்பர் 17 ம் தேதி சேலம் மாநகரில் இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள இரண்டாவது மாநில இணை ஞரணி மாநாடு குறித்து. 2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்! டாக்டர் மா. தீபன் ஏற்பாட்டில்!

பொன்னேரி நகர தி.மு.க. சார்பில் நல உதவிகள்!

டாக்டர் கி.பரிமளம் ஜி.ரவிக்குமார் - கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

சென்னை,டிச.4-

கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொன்னேரி நகர தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பில் அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழ ங்கும் விழா திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செய லாளர் டி.ஜெ. கோவிந்த ராஜன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி பொன்னேரி நகர மன்றத் தலைவர் டாக்டர் கி. பரிமளம் விசுவநாதன், நகரசெயலாளர் வழக்கறிஞர் ஜி.ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் வரவோற்பில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜெ.ஜி.தமிழரசன் கலந்து கொண்டு டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் உள்ள ஆதி திரவிடர் பள்ளியில் முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் மா.தீபன் ஏற்பாட்டில் சுமார் 160 பள்ளி மாணவச் செல்வங்களுக்கு நோட்டுப் புத்தங்கள், புத்தகப் பை, 2 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள் மற்றும் பொதுமக்கள் 250 பேருக்கு அசைவ உணவு பிரியாணி வழங்கினார்.

இதில் கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மிக்ஜாம் புயல் எதிரொலி:

5 துறைமுகங்களில் 3 ஆம் எண்

புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!

சென்னை, டிச.4-

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவி வந்த தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது புயலாக வலுப்பெற்றுள்ளது. இந்த புயலுக்கு 'மிக்ஜாம்' என பெயரிடப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து 310 கி.மீ. தென்கிழக்கு திசையில் புயல் நிலை கொண்டுள்ளது. இது நெல்லூர் மசூலிப்பட்டினம் இடையே 5ம் தேதி மாலை கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர், எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி ஆகிய துறைமுகங்களில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

புயல் காரணமாக பலத்த காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடல் பகுதிக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை காசிமேடு, திருவொற்றியூர், எண்ணூர் கடற்கரைப் பகுதியில் கடல் சீற்றமாக காணப்படுகிறது.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் க.சுந்தர் தமது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அரும்புலியூர் ஊராட்சி மாம்பாக்கம் கிராமத்தில் கட்டப்பட்ட மேல்நிலைப்பள்ளி கூடுதல் கட்டிடத்தை திறந்து வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் டி குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர், ஒன்றிய குழு உறுப்பினர் கு.துரைவேல், ஊராட்சி மன்ற தலைவர் க.வெங்கட்ராமன், ஒன்றிய கழகப் பொருளாளர் பாலமுருகன், பரமசிவம்,ரவீந்திரன்,செயல் அறிஞன், சீனிவாசன் ஞானவேல், சந்தோஷ், ஞானசேகர் மஞ்சுளா முருகன் லட்சுமணன், பாலன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 46 நபர்களுக்கு உடல் உறுப்பு தானம் வழங்கும் நிகழ்ச்சி, மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார் ஏற்பாட்டில் ஒன்றிய செயலாளர் சே.பிரேம்ஆனந்த், முன்னிலையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் உடல் உறுப்பு தானம் செய்திடும் 46 நபர்களுக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அரசு சான்றிதழ்களை வழங்கினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில, பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, ம.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சன்பிரகாஷ், டி. தேசிங்கு, பேபிசேகர், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், க.ஜெயராமன், ஞா.ரமேஷ், மு.ராஜா, பா.மகேஸ்வரி பாலவிநாயகம், ஏ.குட்டி (எ) பக்தவச்சலு, இ.என்.சேகர், ஆர்.திலீப்ராஜ், ப.இம்மானுவேல், வி.தியாகராஜன், வழக்கறிஞர் பெ.வினோத், ஜி.சி.சி.கருணாநிதி, விஜெ. உமாமகேஸ்வரன், அக்னி மாசெ.ராஜேஷ், டி.பிரியாகுமார், கெஜலட்சுமி, பாஸ்முருகான், சரவணமூர்த்தி, பி.அன்பு, வி.உதயகுமார், ராஜேஷ், சரவணன், ராஜீ, ஸ்ரீதர், கே.ஜெயபால், தாஸ், மணிகண்டன், ஜீவா, நவீன்குமார், மணிவண்ணன், தாஸ், பத்மநாபன், அரவிந்த், செல்வகுமார், டிங்கு, அஜீத் உள்பட பலர் கலந்து கொண்டனர்